DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.33/2024

PW - 10

| | | |
|---|---|---|
| Name | : | சுப்ரமணியன் (Lw - 10) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 15.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு ஊரக காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 20.11.2023ம் தேதி எருமப்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது சேலம் நியூரோ பவுண்டேஷன் மருத்துவமனையில் இருந்த வரப்பெற்ற இன்டிமேஷனைப்பெற்று மருத்துவமனை சென்று மருத்துவமனையில் உள் நோயாளியாக இருந்த கோபிநாத் வயது 29 த.பொ.கோபால் என்பவர் மயக்கநிலையில் இருந்ததால் அவர் அருகில் இருந்த அவரது அம்மா பிரேமா என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.390/2023க் கீழ் சட்டப்பிரிவு 294(b), 324, 506(ii) IPC ஆக 20.11.2023ம் தேதி 15.15 மணிக்கு வழக்கு பதிவு செய்து ஒரு நகலை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், மற்ற நகல்கலை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திரு.பாலமுருகன் என்பவரின் பார்வைக்கு வைத்தேன். **(**முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் திரு.பாலமுருகன் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்த பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேனா என்றால் இல்லை. மேற்படி சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் காயம்பட்ட கோபிநாத் என்பவரின் அம்மா கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். சம்பவம் குறித்து நிகர்நிலை புகார்தாரர் பிரேமாவுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. காயம்பட்ட கோபிநாத்திற்கு நாமக்கல் அரசு மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட விபத்து பதிவேட்டில் கோபிநாத் தன்னை இரண்டு நபர்கள் தாக்கியதாகவும், பின்னர் சேலம் நியூரோ பவுண்டேஷன் மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட விபத்து பதிவேட்டில் கோபிநாத் தன்னை மூன்று நபர்கள் தாக்கியதாகவும் கூறியுள்ளது பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். என்னிடம் கோபிநாத்தின் அம்மா பிரேமா புகார் வாக்குமூலம் கொடுத்தபோது தனது மகனை இரண்டு நபர்கள் தாக்கியதாகத்தான் சொல்லி புகார் வாக்குமூலம் கொடுத்தார்.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**